இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 187 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 04 – ஞாயிற்றுக்கிழமை 16 பிப்ரவரி 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 187: Thiruvalluvar Year - 2056 - Maasi 04 - Sunday 16 February 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


# களையெடுப்பல்ல.. கட்டுமானச் சீரமைப்பு!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

நாளுக்கு நாள் திராவிட மாடல் அரசுக்குத் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவு பெருகிக் கொண்டே இருக்கிறது. இந்த ஆதரவு வெற்றியாய் எதிரொலிக்க உங்களில் ஒருவனான நான் நம்புவது, உடன்பிறப்புகளான உங்களின் உழைப்பைத்தான். அந்த உழைப்பே தி.மு.க.வை ஆறாவது முறையாக ஆட்சிக்குக் கொண்டு வந்தது.

**ஆட்சியில், மக்கள் நலனுக்கான திட்டங்களை அறிவித்து, அதனை முழுமையாகச் செயல்படுத்திடும் வகையில் அயராமல் உழைக்கின்ற காரணத்தினால்தான் மக்களிடம் ஆதரவு பெருகியுள்ளது. உடன்பிறப்புகளின் உழைப்பும் பொதுமக்களின் ஆதரவும், வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஏழாவது முறையாகக் கழகத்தை ஆட்சியில் அமர்த்தும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்.**

தமிழ்நாட்டு மக்கள் நமக்கு வழங்கிய ஆட்சியை அவர்களுக்கான ஆட்சியாக நாம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நமது திராவிட மாடல் அரசு பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற இலட்சிய நோக்கத்துடன் நமது திராவிட மாடல் அரசு செயலாற்றி வரும் நிலையில், தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நமக்குரிய நிதியை வழங்காமல் தமிழ்நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து துரோகம் செய்து வருகிறது. மாநில உரிமைக்கு எதிரான பா.ஜ.க அரசின் பழிவாங்கும் போக்கையும் எதிர்கொண்டு இந்தியாவின் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறோம்.

ஒன்றிய அரசின் நிறுவனங்களும், நிதி ஆயோக் போன்ற அமைப்புகளும் வெளியிடும் புள்ளிவிவரங்களில் தமிழ்நாடு பல்வேறு இலக்குகளில் சிறந்து விளங்குகிறது. அப்படியிருந்தும் நமக்குரிய நிதிப் பங்களிப்பு கிடைக்கவில்லை. நமக்கான திட்டங்களை பா.ஜ.க. அரசு முன்னெடுப்பதில்லை. தமிழ்நாட்டை பா.ஜ.க. வஞ்சித்தாலும், தி.மு.க. மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் திராவிட மாடல் அரசின் நலத் திட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயனளித்து வருகின்றன.

> **“நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட கழகத்தின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம், உடன்பிறப்புகளின் உழைப்பு எனும் அடித்தளத்தில் இன்றளவும் வலிமையாகத் திகழ்கிறது. அதனால் நம் எதிரிகளின் கண்களை உறுத்துகிறது. முத்தமிழறிஞர் கலைஞரின் சிந்தனையிலும் செயலிலும் உருவான கழகத்தின் கற்கோட்டையான அறிவாலயத்திலிருந்து செங்கல்லை உருவலாம் எனக் கனவு காண்பவர்கள் தரையில் விழுந்து தலையில் அடிபட்டபின், கனவு கலைந்து விழித்துக் கொள்ளலாமே தவிர, அறிவாலயத்தின் ஒரு துகளைக் கூட எவராலும் அசைக்க முடியாது என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமை மிக்க வரலாறு.”**

**‘இந்தியாவின் முதன்மை முதலமைச்சர்’ என்பதைவிட, ‘இந்தியாவின் முதன்மை மாநிலம் தமிழ்நாடு’ என்ற நிலையை எல்லாத் துறைகளிலும் எட்டுவதே நமது இலக்காகும். அந்த இலக்கை அடைவதற்கு ஏழாவது முறையும் தி.மு.க.வின் ஆட்சி தொடர வேண்டும்.**

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக திருச்சி சிறுகனூரில் நடைபெற்ற தேர்தல் சிறப்புப் பொதுக் கூட்டத்தில், அ.தி.மு.க. ஆட்சியில் பின்னோக்கித் தள்ளப்பட்ட தமிழ்நாட்டை மீட்டு, வலிமையும் செழிப்புமிக்க மாநிலமாக மாற்றிடுவதற்கான தி.மு.க.வின் 7 அம்சத் திட்டங்களை வெளியிட்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கு 10 ஆண்டுகள் தேவை என்பதைக் குறிப்பிட்டு, “அந்த வாய்ப்பை தி.மு.க.வுக்கு வழங்குங்கள்” என்று கேட்டேன். முதல் 5 ஆண்டு காலத்தை நம்பிக்கையுடன் வழங்கிய மக்கள், நமது திராவிட மாடல் ஆட்சியின் திறன்மிகு நிர்வாகத்தையும், சிறப்பான திட்டங்களையும் உணர்ந்து தொடர்ச்சியான வாய்ப்பை வழங்கிடத் தயாராக இருக்கிறார்கள்.

**தி.மு.க.வுக்கு நல்வாய்ப்பு அமைகிறதென்றால் அதனைக் கெடுப்பதற்கான சதிகளைச் செய்யும் அரசியல் சக்திகள் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு முகமூடியுடன் வெளியே வரும். தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான, தமிழ்நாட்டுக்கு எந்தப் பயனுமில்லாத, கள்ளக் கூட்டணி வைத்திருக்கிற, காசு வாங்கிக் கொண்டு கூவுகிற அந்த முகமூடிகளைக் கிழித்தெறிந்து கழகத்தின் தலைமையிலான அணியின் வெற்றியை உறுதி செய்வோம். அந்த வெற்றியை அடைவதற்கான நிர்வாக வசதிக்காகத்தான் மாவட்டக் கழக நிர்வாகத்தில் மாற்றங்கள் தொடங்கியுள்ளன.**

திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளராக திரு.மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ., திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக திரு.எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக திரு.பழனிவேல், நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளராக திரு.கே.எம். ராஜு ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதுபோலவே ஈரோடு, திருப்பூர், விழுப்புரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளுக்கான மாவட்டப் பொறுப்பாளர்களாக மாண்புமிகு அமைச்சர் சு.முத்துசாமி, மாண்புமிகு அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு அமைச்சர் பி.மூர்த்தி, திரு.செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., திரு.க.செல்வராஜ் எம்.எல்.ஏ., டாக்டர். ஆர்.லட்சுமணன் எம்.எல்.ஏ., திரு. கோ.தளபதி எம்.எல்.ஏ., திரு என்.நல்லசிவம், திரு.தோப்பு வெங்கடாசலம், திரு.கௌதம சிகாமணி, திரு.இல. பத்மநாபன், திரு.என்.தினேஷ்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டு அவர்களின் பொறுப்பிலான சட்டமன்றத் தொகுதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றத் தேர்தலுக்கு ஓர் ஆண்டு காலமே இடையில் உள்ளதால் அதற்கேற்ப களப்பணிகள் அமைந்திட வேண்டும் என்பதற்காகவே இந்த மாற்றங்களும் அதற்கேற்ற வகையிலான நியமனங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோல இன்னும் சில அறிவிப்புகளையும் உடன்பிறப்புகள் எதிர்பார்க்கக்கூடும்.

## உங்களில் ஒருவன்

உங்களில் ஒருவனான என்னைப் பற்றி கழக நிர்வாகிகள் நன்கறிவீர்கள். ஒரு பொறுப்பிலிருந்து ஒருவரை மாற்றுவது குறித்து ஒன்றுக்கு நூறு முறை யோசித்து, தலைமைக் கழக நிர்வாகிகளுடன் பல சுற்றுகள் ஆலோசித்து, கழகத்தின் நன்மை கருதியே இறுதி முடிவெடுப்பேன். இப்போதும் அப்படித்தான் முடிவெடுக்கப்பட்டுள்ளது. கழகத்தின் நலன் கருதி இத்தகைய முடிவுகள் தொடரும்.

**இயக்கம் என்பது தேவைக்கேற்ற மாற்றங்களுடன் இயங்கிக் கொண்டிருந்தால்தான், காலத்திற்கேற்ற வளர்ச்சியைப் பெற முடியும். இந்த மாற்றங்களினால் கழகத்தில் ஏற்கனவே பொறுப்பில் இருந்தவர்களுக்கும் புதிதாகப் பொறுப்புக்கு வந்திருப்பவர்களுக்கும் என் இதயத்தில் நிறைந்துள்ள அன்பில் அணுவளவும் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. எப்போதும் போல நாம் எல்லோரும் கலைஞரின் உடன்பிறப்புகள்தான்.**

முன்பு பொறுப்பில் இருந்தவர்கள் தற்போது பொறுப்பில் இருப்பவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிக் கடமையாற்ற வேண்டும். புதிதாகப் பொறுப்புக்கு வந்திருப்பவர்கள், ஏற்கனவே பொறுப்பில் உள்ளவர்களை அரவணைத்து, மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் - கிளைக் கழகங்கள் வரை எல்லாரையும் ஒருங்கிணைத்துச் செயலாற்றிட வேண்டும்.

“இருநூறு தொகுதிகள் இலக்கு” என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், ஒவ்வொரு, தொகுதியிலும் வெற்றியினை உறுதி செய்யும் வகையில், களத்திற்கேற்ற வியூகம் அமைத்து, வெற்றிப் பாதையில் பயணிப்பதற்காக இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது களையெடுப்பு அல்ல, கட்டுமானச் சீரமைப்பு. தி.மு.கழகம் எனும் 75 ஆண்டு கால இயக்கத்தின் உறுதிமிக்க கட்டுமானம்; மேலும் வலிவுடனும் பொலிவுடனும் திகழ்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சீரமைப்பு நடவடிக்கை.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட கழகத்தின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம், உடன்பிறப்புகளின் உழைப்பு எனும் அடித்தளத்தில் இன்றளவும் வலிமையாகத் திகழ்கிறது. அதனால் நம் எதிரிகளின் கண்களை உறுத்துகிறது.

**முத்தமிழறிஞர் கலைஞரின் சிந்தனையிலும் செயலிலும் உருவான கழகத்தின் கற்கோட்டையான அறிவாலயத்திலிருந்து செங்கல்லை உருவலாம் எனக் கனவு காண்பவர்கள் தரையில் விழுந்து தலையில் அடிபட்டபின், கனவு கலைந்து விழித்துக் கொள்ளலாமே தவிர, அறிவாலயத்தின் ஒரு துகளைக் கூட எவராலும் அசைக்க முடியாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமை மிக்க வரலாறு.**

தமிழ்நாட்டு மக்கள் மனதில், குறிப்பாகப் பெண்கள்-இளைஞர்கள் ஆகியோரிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ள இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் கொள்கைக் கூட்டணியினரான தோழமைக் கட்சியினரும் சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி முத்திரை பதிப்பதைத் தடுக்க முடியாது என்பது அரசியல் எதிரிகளுக்கும் நன்றாகத் தெரியும். அதனால்தான் கள்ளக்கூட்டணி, திரைமறைவுக் கூட்டணி, வாக்கைச் சிதறடிக்க நினைக்கும் கூட்டணி என, நம்மை எதிர்ப்பவர்கள் எத்தனை ‘கெட்டப்’ போட்டு வந்தாலும், களம் நமதே! மக்களின் ஆதரவு நம் பக்கமே! மக்களுக்குத் துணையாக நிற்போம்! கவனமாக உழைப்போம்! வெற்றி நமதே!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 02
14.02.2025.

---

### ஓராண்டைக் கடந்து போராட்டம் நடந்து வருகிறது

## பிப்.25-ல் டெல்லியில் விவசாயிகள் முற்றுகைப் போராட்டம்!

### மீண்டும் நடத்தப் போவதாக அறிவிப்பு!

புதுடெல்லி, பிப்.16 –

விளைப்பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஓராண்டைக் கடந்து விவசாயிகள் போராட்டம் நீடித்து வருகிறது.

விளைப்பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், அரியானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் விவசாயிகள் ஓராண்டாக போராடி வருகின்றனர். இருப்பினும், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்க ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. இதனால் விவசாயிகள் தங்களது போராட்டத்தை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

கடந்த நவம்பர் 26ம் தேதி முதல், விவசாய சங்கத் தலைவர் தாலேவால் தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகிறார். குடியரசு தினத்தன்று விவசாயிகள் டிராக்டர் போராட்டத்தை நடத்தினர்.

இந்நிலையில், விவசாய சங்கங்களுடன் ஒன்றிய அரசு நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தியது. சண்டிகரில் மாலை 5 மணிக்கு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விவசாயிகள் சங்கங்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டனர். ஒன்றிய விவசாய துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாததற்கு விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். பேச்சுவார்த்தையில் குறைந்தபட்ச ஆதரவு விலை உடன்பாடு உத்தரவாதம் அளிக்கப்படாவிட்டால் பிப்ரவரி 25ம் தேதி முதல் மீண்டும் டெல்லி முற்றுகை போராட்டம் நடைபெறும் என்று விவசாயிகள் எச்சரித்துள்ளனர்.

இதற்கிடையே, கடந்த ஓராண்டு போராட்டத்தில் போலீஸார் நடத்திய தாக்குதல் மற்றும் துப்பாக்கிச்சூடு காரணமாக இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளதாக விவசாயிகள் கூறியுள்ளனர்.

ஒன்றிய அரசுக்கு எதிராக ஓராண்டைக் கடந்து நீடிக்கும் விவசாயிகள் போராட்டம் விளைப்பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், அரியானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் விவசாயிகள் ஓராண்டாக போராடி வருகின்றனர் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்க ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது இதனால் விவசாயிகள் தங்களது போராட்டத்தை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நடத்தி வருகின்றனர் கடந்த நவம்பர் 26 முதல், விவசாய சங்கத் தலைவர் தாலேவால் தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகிறார்.

---

### திருப்பரங்குன்றம் விவகாரம்

## சென்னையில் பேரணி நடத்த அனுமதி தர முடியாது!

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, பிப்.16 –

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் சென்னையில் பேரணி நடத்த அனுமதி தர முடியாது என்று பாரத் இந்து முன்னணி தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. மத நல்லிணக்கத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் எந்த போராட்டத்திற்கும் அனுமதி வழங்கக் கூடாது என்றும் நீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதி இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, ஏற்கனவே திருப்பரங்குன்றம் உரிமை குறித்து பியூ கவுன்சில் வரை சென்று முடிவு செய்யப்பட்டுவிட்டதாகவும் அதன் பின்னர் அதுகுறித்து மீண்டும் பிரச்சினை எழுப்புவது சரியில்லை என்று தெரிவித்தார். மனுதாரர் கேட்டுள்ள பாதை என்பது போக்குவரத்து நெருக்கடி நிறைந்த சாலை என்கிற காரணம் மட்டுன்றி, வேறு எந்த இடத்திலும் பேரணிக்கு அனுமதி வழங்கினாலும் தேவையற்ற விரும்பதகாத பிரச்சினையை உருவாக்கும் என்றும் வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, திருப்பரங்குன்றம் பிரச்சினைக்கும், சென்னைக்கும் என்ன தொடர்பு? தேவையில்லாமல் பிரச்சினையை உருவாக்கப் பார்க்கிறீர்கள் என கண்டனம் தெரிவித்தார். சென்னையில் பேரணி நடத்த அனுமதிக்க முடியாது என்று கூறி பாரத் இந்து முன்னணி தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்ற நீதிபதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.